வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

பெறுமதி சேர் வரி (VAT)

VAT கொடுப்பனவு செலுத்துதல் மற்றும் VAT விபரத்திரட்டு சமர்ப்பித்தல் என்பவற்றை நினைவூட்டல்.

1. VAT கொடுப்பனவினை செலுத்துதல்

2026, அக்டோபர் மாதத்திற்கான VAT கொடுப்பனவினை, 2026 நவம்பர் 20 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டும்.

வரி வகை குறியீடு மற்றும் கொடுப்பனவு காலப்பகுதிக் குறியீடுகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வரி வகை குறியீடு	70
காலப்பகுதி குறியீடு	26410
கொடுப்பனவு வகை	S

- கொடுப்பனவுக்குரிய இறுதித் திகதிக்குப் பின்னர், காசோலை அல்லது வங்கி வரைவோலை அல்லது கொடுப்பனவுக் கட்டளை தீர்வையாகும் போதும், தாமதமான செலுத்துதல் எனக் கருதப்படும்.
- வரியை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான தண்டம் விதிக்கப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

2. VAT விபரத்திரட்டினை சமர்ப்பித்தல்

கீழ்வரும் VAT விபரத்திரட்டினை, 2026 நவம்பர் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் நிகழ்நிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

கோப்பிடல் விதம், காலப்பகுதி மற்றும் விபரத்திரட்டு காலப்பகுதிக் குறியீடுகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கோப்பிடல் விதம்	காலப்பகுதி	விபரத்திரட்டு குறியீடு
மாதாந்தம்	2026, அக்டோபர் மாதத்திற்கானது	2641

குறிப்பு:

- தவறான விபரத்திரட்டினைத் தயாரிக்கும் / சமர்ப்பிக்கும் மற்றும் தாமதமாக சமர்ப்பிக்கும் எவரேனும் ஆள் மீது **தண்டம்** விதிக்கப்படும் என்தனையும் கவனத்தில் கொள்ளவும்.
- மேலதிகமாக, **உள்நாட்டு கொள்வனவு அல்லது இறக்குமதி மீதான உள்ளீட்டு வரி வரவு**, உரிய திகதியிலிருந்து **12 அல்லது 24** மாதங்களுக்குள் தாமதமாக VAT விபரத்திரட்டினை சமர்ப்பித்தால், **கீழ் குறிப்பிட்டவற்றுக்கேற்ப அனுமதிக்கப்படாது.**
  - **உள்நாட்டு கொள்வனவு விலைப்பட்டியலில் செலுத்தப்படும் VAT**, அத்தகைய வரி விலைப்பட்டியலின் திகதியிலிருந்து 12 மாதங்கள் காலாவதியாகும் திகதியில் அல்லது அதற்கு முன் முடிவடையும் எந்தவொரு வரி விதிக்கக்கூடிய காலப்பகுதிக்கும் வெளியீட்டு வரிக்கு எதிராக, அந்த வரிவிதிக்கக்கூடிய காலப்பகுதிக்கான VAT விபரத்திரட்டினை **12 மாதங்கள்** காலாவதியாகும் முன் சமர்ப்பிப்பதன் மூலம் கோரப்பட வேண்டும்.
  - **இறக்குமதிகளின் போது செலுத்தப்படும் VAT இனை** , சுங்க வெளிப்படுத்தல் திகதியிலிருந்து **24 மாதங்கள்** காலாவதியாகும் திகதியில் அல்லது அதற்கு முன் முடிவடையும் எந்தவொரு வரி விதிக்கக்கூடிய காலப்பகுதிக்கும் வெளியீட்டு வரிக்கு எதிராக, அந்த வரி விதிக்கக்கூடிய காலப்பகுதிக்கான VAT விபரத்திரட்டினை, 24 மாதங்கள் காலாவதியாகும் முன் சமர்ப்பிப்பதன் மூலம் கோரப்பட வேண்டும்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்